செ.வெ.எண்: 525 நாள்: 18.09.2021

# புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாமிற்கான முன்னேற்பாடுபணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாமிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.09.2021) நடைபெற்றது.

பின்னர் இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கோவிட்-19 நோய் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டத்திலும் பொதுமக்களை கோவிட் நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தினந்தோறும் கோவிட் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கடந்த வாரம் 12.09.2021 அன்று 750 இடங்களில் மெகா கோவிட் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு இலக்கைத் தாண்டி 66,766 பேர் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நாளை 19.08.2021 புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாம்கள் நடைபெற உள்ளது.

இதில் கறம்பக்குடி வட்டாரத்தில் 36 இடங்களிலும், கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில் 30 இடங்களிலும், திருமயம் வட்டாரத்தில் 32 இடங்களிலும், அரிமளம் வட்டாரத்தில் 35 இடங்களிலும், விராலிமலை தாலுகாவில் 36 இடங்களிலும் மற்றும் புதுக்கோட்டை நகராட்சியில் 20 இடங்களிலும் ஆக மொத்தம் 189 இடங்களில் கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாம்களை சிறப்பாக நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாம் நடைபெறும் பகுதிகளில் முகாம் குறித்து கொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ விளம்பரம் செய்யவும், தடுப்பூசி செலுத்திக்கொள்ள வருபவர்களுக்கு டோக்கன் வழங்கவும், முகாமில் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும், இதுவரை கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் மற்றும் இரண்டாம் தவணை கோவிட் தடுப்பூசி செலுத்த

வேண்டியவர்களை அதிக அளவில் மெகா தடுப்பூசி முகாமில் கலந்து கொள்ள செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பூவதி, ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.ராமு, துணை இயக்குநர்கள்(சுகாதாரப்பணிகள்) மரு.அர்ஜீன் குமார், மரு.கலைவாணி, நகராட்சி ஆணையர் நாகராஜன் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்கள்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**